**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**

# கணக்கீடு – 33 தரம் - 13

# Covid – 19 இடர் விடுமுறைகால பயிற்சி - 9

## தேர்ச்சி – 12.8 : காசுப்பாய்ச்சல் கூற்று

வாரம் - 9 தயாரிப்பு : **சஜித்.sp**
**இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லூரி** **BBA(Financial Spl), University of Colombo**

**பகுதி - 1**

- நிறுவனமொன்றின் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **1 ஆம், 2** ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| **விபரம்** | **ரூபா "000"** |
|---|---|
| - வியாபார கொடுக்குமதிகளுக்கு செலுத்திய காசு | 76 |
| - வியாபார வருமதிகளுக்கு பெற்ற காசு | 168 |
| - செலுத்திய செலவுகள் | 40 |
| - 01.04.2021 இல் காசு மீதி | 60 |
| - 31.03.2022 இல் காசு மீதி | 50 |
| - 01.04.2021 இல் 3 மாதகால திறைசேரி உண்டியல்கள் | 300 |
| - 31.03.2022 இல் 3 மாதகால திறைசேரி உண்டியல்கள | 120 |

**1.** 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசும் காசிற்கு சமமானவைகளில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு அல்லது குறைவு ஆனது பின்வருவனவற்றுள் எது? **ரூபா**
**1.** 10 000 அதிகரிப்பு **2.** 10 000 குறைவு **3.** 180 000 அதிகரிப்பு
**4.** 180 000 குறைவு **5.** 200 000 அதிகரிப்பு

**2.** முதலீட்டு நடவடிக்கைகள், நிதியீட்ட நடவடிக்கைகள் இரண்டிலிருந்தான தேறிய காசுப்பாய்ச்சல்களின் மொத்தத் தொகை பின்வருவனவற்றுள் எது? **ரூபா**
**1.** 52 000 உட்பாய்ச்சல் **2.** 190 000 வெளிப்பாய்ச்சல **3.** 190 000 உட்பாய்ச்சல்
**4.** 242 000 உட்பாய்ச்சல் **5.** 242 000 வெளிப்பாய்ச்சல்

- கீழே தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் **3,4,5** வினாக்களுக்கு விடை தருக.
வரையறுக்கப்பட்ட முரளி தரன் நிறுவனத்தின் 31.03.2022 இல் காசுப் பாய்ச்சல் கூற்றில் இருந்து எடுக்கப்பட்ட தகவல்கள்:

| | **ரூபா "000"** |
|---|---|
| - வரிவட்டி தவிர்ந்த தொழிற்பாடு மூலதன அதிகரிப்பு | 38 |
| - நிதியீட்ட நடவடிக்கை மூலமான உருவான தேறிய காசு | 120 |
| - முதலீட்டு நடவடிக்கை மூலமான உருவான தேறிய காசு | 100 |

- 31.03.2022 இல் வருமானக்கூற்றில் உள்ளடங்கிய வட்டியும் வருமான வரியும் முறையே ரூபா 36 000 , ரூபா 48 000 ஆகும்.
- **மீதிகள்**

| **மீதிகள்** | **31.03.2021** | **31.03.2022** |
|---|---|---|
| சென்மதி வட்டி | ரூபா 12 000 | ரூபா 18 000 |
| வருமானவரி ஏற்பாடு | ரூபா 24 000 | ரூபா 32 000 |
| காசும் காசுக்கு சமனானவை | ரூபா 28 000 | ரூபா 60 000 |

**3.** 31.03.2022 இல் இல் காசும் காசுக்கு சமமானவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பு?
**1.** ரூபா 28 000 **2.** ரூபா 32 000 **3.** ரூபா 40 000
**4.** ரூபா 60 000 **5.** ரூபா 88 000

Sajith.SP

**4.** 31.03.2022 ஆண்டுக்கான செயற்பாட்டு நடவடிக்கையால் உருவான தேறிய காசு?
**1.** ரூபா 12 000 **2.** ரூபா 20 000 **3.** ரூபா 50 000
**4.** ரூபா 75 000 **5.** ரூபா 188 000

**5.** 31.03.2022 இல் தொழிற்படு மூலதன மாற்றத்திற்கு முன்னர் கணிப்பிடக்கூடிய இலாபம் அல்லது (நட்டம்)?
**1.** ரூபா 80 000 **2.** ரூபா 82 000 **3.** ரூபா 134 000
**4.** ரூபா 156 000 **5.** ரூபா 170 000

★ **6,7** வினாக்களுக்கு பின்வரும் தரவுகளைப் பயன்படுத்தி விடையளிக்குக.

| **விபரம்** | **ரூபா "000"** |
|---|---|
| - செயற்பாட்டால் உருவாகிய காசு அதிகரிப்பு | 4 480 |
| - தொழிற்படு மூலதன அதிகரிப்பு | 240 |
| - செலுத்திய வட்டி | 240 |
| - நிதியீட்ட நடவடிக்கை மூலமான உருவான தேறிய காசு | 1 080 |
| - முதலீட்டு நடவடிக்கை மூலமான பயன்படுத்திய தேறிய காசு | 1 000 |
| - 01.04.2021 இல் காசும் காசுக்கு சமனானவை | 1 800 |
| - 31.03.2022 இல் காசும் காசுக்கு சமனானவை | 4 060 |

2022.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் வருமானக் கூற்றில் இயந்திர விற்பனை இலாபம் ரூபா 100 000, முதலீட்டு வருமானம் ரூபா 140 000, பெறுமானத்தேய்வு ரூபா 400 000, கடன்வட்டி ரூபா 320 000 வருமானவரி ரூபா 2 000 000 என்பவை உள்ளடக்கப்பட்டு இருந்தது.

**6.** 2022.03.31 இல் வரிக்கு முன் தேறிய இலாபம் தொகை? **"000" களில்**
**1.** ரூபா 3 000 **2.** ரூபா 4 240 **3.** ரூபா 5 200
**4.** ரூபா 6 240 **5.** ரூபா 7 200

**7.** 2022.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் செயற்பாட்டால் ஏற்பட்ட நிகர தேறிய காசு அதிகரிப்பும் செலுத்திய வருமானவரியும் முறையே? **ரூபா "000" களில**
**1.** 2 340, 1 900 **2.** 2 340, 2 100 **3.** 2 180, 2 060
**4.** 4 240, 2 100 **5.** 4 240, 1 900

★ பின்வரும் தகவல்களின் அடிப்படையில் **8,9,10,11** வினாக்களுக்கு விடை தருக
வரையறுக்கப்பட்ட மோகன்ராஜ் பொதுக் கம்பனியொன்றின் நிதிக்கூற்றுக்களிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட தகவல்கள் சில பின்வருமாறு: **ரூபா "000"**

| | **31.03.2022** | **31.03.2021** |
|---|---|---|
| • கூறப்பட்ட மூலதனம் சாதாரண பங்குகள் | 3 000 | 2 000 |
| • மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் - காணி | 400 | - |
| • பொது ஒதுக்கம் | 750 | 600 |
| • நிறுத்தி வைத்த உழைப்பு | 1 750 | 1 150 |



Sajith.SP

**பிற பொருத்தமான தகவல்கள்:**

1. இவ் வருடத்திற்கான பெறுமானத் தேய்வு ரூபா 250 000 ஆகவும், தொழிற்படு மூலதனத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூபா 400 000 ஆகும்.
2. 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான வருமான வரி ரூபா 300 000 ஆக மதிப்பிடப்பட்டது. 2021.03.31 இல் காணப்பட்ட வருமான வரிப் பொறுப்பு ரூபா 200 000 ஆனது ரூபா 125 000 ஆக இவ் வருடத்தில் இணங்கிக் கொள்ளப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது.
3. 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்காகச் செலுத்திய பங்கிலாபம் ரூபா 250 000 ஆகக் காணப்பட்டதுடன் வருடத்தினுள் நிறுத்தி வைத்த உழைப்பிலிருந்து பொது ஒதுக்கத்திற்கு ஒரு தொகை மாற்றப்பட்டுள்ளது.
4. கம்பனிக்கு சொந்தமான காணி 2022.03.31 இல் மீண்டும் மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. முன்னைய வருடத்தில் மீள்மதிப்பீட்டின் போது ரூபா 250 000 குறைவொன்று அறிக்கைப்படுத்தப்பட்டிருந்தது. இவ் வருடத்திற்கான இது தொடர்பான சீராக்கங்கள் அனைத்தும் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**8.** 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் வரிக்கு முன்னரான இலாபம் எவ்வளவு? **"000" களில்**

**1.** ரூபா 1 000 **2.** ரூபா 1 100 **3.** ரூபா 1 150
**4.** ரூபா 1 175 **5.** ரூபா 1 225

**9.** 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் ஏனைய முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு? **"000" களில்**

**1.** ரூபா 100 **2.** ரூபா 150 **3.** ரூபா 250
**4.** ரூபா 400 **5.** ரூபா 450

**10.** 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான செயற்பாட்டு நடவடிக்கை மூலமான தேறிய காசுப்பாய்ச்சல் எவ்வளவு? **"000" களில்**

**1.** ரூபா 600 **2.** ரூபா 725 **3.** ரூபா 825
**4.** ரூபா 975 **5.** ரூபா 1 225

**11.** 2022.03.31 இல் முடிவடையும் வருடத்திற்கான இக்கம்பனியின் மொத்த முற்றுமடங்கிய வருமானம் எவ்வளவு? **"000" களில்**

**1.** ரூபா 600 **2.** ரூபா 850 **3.** ரூபா 1 100
**4.** ரூபா 1 250 **5.** ரூபா 1 500

Sajith.SP